மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பற்றுக்குறை ஏற்படும் என்ற அளவில் 22,000 டன் என்று நாங்கள் கணக்குப் போட்டிருந்தாலும்கூட, 1973-ம் ஆண்டிலே அரசு இருப்பிலிருந்தும் தனி வணிகர்களாலும் 71,736 டன் அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அதையொட்டி நாங்கள் கொடுத்திருக்கிற கணக்கு 22,000 டன் பற்றுக்குறை என்றிருந்தாலும், அங்கே மேற்கொண்டு 50,000 டன் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் அங்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த உபரியாக வருவதை யார் வாங்குகிறார்கள், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் கடத்தல்காரர்களால் தான் இந்த அதிகவிலை விற்கும் பிரச்னை ஏற்பட்டு வருகிறது. இந்த 50,000 டன்னையும் அரசே கூட்டுறவுத் துறையின் மூலம் ரூ. 1·50 விலையில் விற்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஏற்பாட்டிலே ஏதாவது தவறு இருந்தால், சுட்டிக் காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 18—3—1974-ம் நாளன்று விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் 34. உணவு பொருள்கள் வழங்கு துறை, 55. பல்வகை மூலதனச் செலவு ஆகியவை 22—3—1974-ம் நாளன்றும், 22—3—1974-ம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக்கோரிக்கைகள் எண் 18. மருத்துவம், 19. பொதுச் சுகாதாரம், 47. பொதுச் சுகாதாரம், துப்புரவு நீர்வழங்கல் குறித்த மூலதனச் செலவு, 33. நகரப் பகுதி வளர்ச்சி ஆகியவை 18—3—1974-ம் நாளன்றும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கிறேன்.

6. 1974–75 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. குழ. செல்லையா : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்தினைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தனக்கே உரிய நல்ல தமிழில் மிக தெளிவாக நீண்டதொரு அறிக்கையாகச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், உற்பத்தி குறைவிற்கும், இங்கே ஏற்படுகின்ற அந்தக் குறைகளைத் தடுப்பதற்கும் பூரண முழுப்பொறுப்பு நடுவண் அரசுதான் என்பதை இங்கே தெளிவாக